# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

**இல. 8,219 — 1936 ம் ௵ வைகாசி௴ 22 ந் திகதி, வெள்ளிக்கிழமை.**


## Part IV.—நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் விளம்பரம்.

1896 ம் ஆண்டின் 13 ம் இலக்க ஸ்தல யாத்திரைகளைப்பற்றிய சட்டம்.

1936 ம் ஆண்டு ஆடி மாசத்தில் கதிர்காம எசல திருவிழாவுக்கு வழக்கமான யாத்திரையை நோக்கி, உத்தம தேசாதிபதியவர்கள் 1897 ம் ஆண்டின் 7 ம் இலக்கச் சட்டத்தின் பிரகாரம் 1931 ம் ஆண்டின் இலங்கைச் (இராச்சிய மந்திர சபை)சபையின் கட்டளையின் 93 ம் பிரிவினது அதிகாரங்களைக்கொண்டு செய்த பிரமாணங்கள்.

டி. பி. ஜயதிலக்க,
சுயகாரிய மந்திரி.

சுயகாரிய மந்திரி கந்தோர்,
கொழும்பு, 1936 ம் ஆண்டு வைகாசி௴ 8 ந் உ.

பிரமாணங்கள்.

1. (a) கதிர்காமத்தில் 1936 ம் ஆண்டு எசல திருவிழா நடக்கும் நாட்களும் யாத்திரிகர் கதிர்மாமத்தில் தங்கக்கூடிய காலமும் 17 நாட்கள் மாத்திரம்தான். அதாவது 1936 ம் ஆண்டு ஆடி மாதம் 18 ந் திகதி தொடக்கம் ஆவணி மாதம் 3 ந் திகதி முடியும் வரைக்கும்.
(b) முதலாவதாகச் சொல்லப்பட்ட தேதிக்கு முன்பாக வருகிற அல்லது குறிக்கப்பட்ட காலத்துக்குப்பின் நிற்கிற யாத்திரிகர்களை குற்றவாளியர்களாகக காணப்படும்.

2. "யாத்திரிகர் தங்கியிருக்கும் பாடி" ஊவா மாகாண அரசாட்சி ஏசண்டரின் மேல் அதிகாரத்திலும், "பார்வைசெய்கிற உத்தியோகஸ்தர்" என்று பெயர் கொடுக்கப்பட்ட பொறுப்பேற்றிருக்கும் உத்தியோகஸ்தரின் உடன் அதிகாரப் பார்வையிலும் இருக்கும் பின்னுவதாக சொல்லப்பட்ட உத்தியோகஸ்தருக்கு ஒரு வைத்திய உத்தியோகஸ்தரும் ஒரு பொலீஸ் உத்தியோகஸ்தரும் உதவி புரிவார்கள்.

3. கதிர்காமத்தில் திருவிழா நடக்கும் காலத்தில் தொற்று வியாதி உண்டுபடின் பார்வைசெய்கிற உத்தியோகஸ்தருக்கு திருவிழாவை நிறுத்தவும் யாத்திரிகர்களை அந்த ஊரை உடனே விட்டு தங்கள் இடங்களுக்குப் போகும்படி செய்யவும் இன்ன பாதையாற் போகவேண்டுமென்றும் நியமிக்கவும் தத்துவமுண்டு.

4. பார்வைசெய்யும் உத்தியோகஸ்தருக்கு கதிர்காமத்திலும் போகும் பயணத்திலும் திரும்பிச்செல்லும் பயணத்திலும் இதன்கீழ் குறிக்கப்பட்டவைகளைச்செய்ய அதிகாரமுண்டு :—

(a) யாத்திரிகர்களுக்கு கழுவவும், முழுகவும், தண்ணீரெடுக்கவும், தண்ணீர் குடிக்கவும், மலசலபாதைக்குப் போகவும் வேறு வேறு தலங்களை நியமிக்கவும் ;

(b) அந்த வகுப்பைச்சார்ந்த யாத்திரிகர் தங்கியிருக்கும்படி வெவ்வேறு தலங்களை நியமிக்கவும் ;

(c) யாத்திரிகர் கூட்டமாக இன்ன பாதையால் செல்லவேண்டுமென்று நியமிக்கவும் ;

(d) யாத்திரிகர்களுக்குக் கொடுக்கப்படும் தீன் பகிர்ந்து கொடுத்தலைப் பார்த்து நடத்தவும் ;

(e) நோய்கொள்ளும் யாத்திரிகர்களுக்குத் தங்கியிருக்கும்படி வெவ்வேறே தலத்தை நியமிக்கவும் அவ்வாட்களுடன் வேறொருவரையும் கலவாமலிருக்கும்படிபண்ணவும், அவர்களுக்குப் பயணம்போகக்கூடாதுபோனல் நிறுத்தி வைத்திருக்கவும்.

இவ்விதமான காரணங்களைக்கொண்டு பார்வைசெய்கிற உத்தியோகஸ்தரினுல் கொடுக்கப்படுகிற கட்டளையை ஏதாவது எவராவது மீறுபவர் குற்றவாளியாகக் காணப்படுவர்.

5. இந்தப் பிரமாணங்களின் பொருட்டு "யாத்திரிகர் தங்கியிருக்கும் பாடி" என்பதாவது :—

(a) கதிர்காமத்துப் பெரிய கோயிலைச் சுற்றி நாலு பக்கமும் அரைக் கட்டை தூரத்துக்குள் உள்ள பாகம்.

(b) செல்லக் கதிர்காமத்துப் பிள்ளையார் கோயிலைச் சுற்றி நாலு பக்கமும் காக்கட்டை தூரத்துக்குள் உள்ள பாகமும்.

6. பயணத்தில் அல்லது தங்கியிருக்குமிடத்தில் சுகத்துக்குப் பழுதானதென்று பார்வைசெய்கிற உத்தியோகஸ்தர் அல்லது அப்படியான உத்தியோகஸ்தர் இல்லாதிருந்தால் பிரதான பொலீஸ் உத்தியோகஸ்தர் காணுந் தீன் சாமானெல்லாவற்றையும் பறித்து அழித்துப்போடப் பொலீசார் தத்துவமுடையவராயிருப்பர். இந்தக் கடமையை அல்லது வேறு எந்தக் கடமையையும் பொலீசார் செய்யும்போது அவ்விதஞ் செய்யவிடாமல் எவராவது தடைபண்ணுபவர் குற்றவாளியாகக் காணப்படுவர்.

7. பார்வைசெய்கிற உத்தியோகஸ்தரிடமிருந்து அல்லது அவரால் தத்துவம் கொடுக்கப்பட்ட உத்தியோகஸ்தரிடமிருந்து உத்தரவுச்சீட்டு பெறுமல் மாடுகளை அல்லது வண்டி மாடுகளை தங்கியிருக்குமிடமிருந்து காற்கட்டைக்குட்பட யாராகுதல் கொண்டுவந்தால் அவர்கள் குற்றவாளியர்களாக காணப்படுவார்கள்.

8. உத்தரவுச்சீட்டுப் பெறுவோர் தங்கியிருக்குமிடத்தில் பார்வைசெய்கிற உத்தியோகஸ்தரால் சனங்களின் பொதுச் சுகத்துக்காகவும், சுகாதாரத்துக்காகவும், போக்குவரவுக்கு தகுதியாயும் நியமிக்கப்படும் கட்டளைப் பிரமாணங்களை அனுசரிக்கக் கடமைப்பட்டவர்களாவார்கள்.

9. (1) (a) எவ்வித சாமான்களையும் பார்வைசெய்கிற உத்தியோகஸ்தர் குறித்துவிடும் இடத்திலன்றி வேறெந்த இடத்திலும் விற்க வைத்திருக்கும் எவரும் குற்றவாளியாகக் காணப்படுவர்.

(b) பார்வைசெய்கிற உத்தியோகஸ்தர் அல்லது வைத்திய உத்தியோகஸ்தர் அல்லது அவர்கள் இலலாதிருந்தால் பிரதான பொலீஸ் உத்தியோகஸ்தர் சுகத்துக்குப் பழுதான போசனமென்று தீர்க்கும் எப்போசனத்தையும் விற்கும் எவரும் குற்றவாளியாகக் காணப்படுவர்.

2. (*a*) சகல சாப்பாட்டுக்கடைகளும், தேத்தண்ணீர் கோப்பிக் கடைகளும் பார்வைசெய்கிற உத்தியோகஸ்தரின் திருப்திக்கு துப்பரவாகவும் சுகாதாரத்துக்கு ஏற்றதாயும் வைத்திருக்க வேண்டும்.

(*b*) விற்பனைக்கு வைத்திருக்கும் எல்லாவிதமான கேக் வகைகளும் இனிப்புச் சாமான்களும், மற்றும் சமயல் செய்யப்பட்ட தீன்பண்டங்களும் இலேயான் போகாதபடி செய்யப்பட்ட கண்ணாடிப் பெட்டிக்குள் வரிசையாக வைத்திருக்கவேண்டும்.

(*c*) மிஞ்சிய தேத்தணணீர், கோப்பி அல்லது பால் அல்லது மிச்சமான சாப்பாடு, சமையல்பாகக் கழிவுகள் அல்லது குப்பை, நிலத்திலே வீசப் படாது. ஆனால் இவைகளை சுகாதார வேலையாட்கள் அப்புறப்படுத்துவதற்காக பின்னாற் குறிக்கப்பட்ட பாத்திரத்திலே சேர்த்துவைக்கவேண்டும்.

(*d*) வியாபாரத்துக்கு அல்லது வேறு முயற்சிக்குப் பாவிக்கப்படும் ஒவ்வொரு கட்டடத்திலும் அல்லது கொட்டிலிலும் நாலரை அடிக் கணத்துக்குக் குறையாமலுள்ள லோகத்தினால் அல்லது மரத்தினால் செய்யப்பட்ட ஊத்தைப்பெட்டி ஒன்று இருக்கவேண்டும். அதில் அந்த இடத்திலுள்ள குப்பை மற்றும் கழிவுசாமான்களைப் போட வேண்டும். குப்பை அல்லது கழிவு சாமான்கள் போடும்பொழுது அல்லது வெளியே எடுக்கும்பொழுது தவிர மற்ற எல்லா வேளைகளிலும் அதை ஒரு லோக அல்லது மரமூடியினால் மூடப்பட்டிருக்கவேண்டும்.

10. யாராயினும் கதிர்காமத்தில் தங்கியிருக்கும் காலத்தில் அரசாட்சியாரால் நியமித்திருக்குமிடத்தைவிட வேறெந்த விடத்திலும் மலசலங் கழித்தால் அல்லது மலத்தை மண்ணால் மூடாவிட்டால், அல்லது பார்வை செய்கிற உத்தியோகஸ்தரால் நியமிக்கும் தலத்துக்கு மேலே ஆற்றிலிறங்க அல்லது குளிக்கச் சம்பவித்தால் அப்படிச் செய்தவர்கள் குற்றவாளியர்களாக காணப்படுவார்கள்.

11. தொற்று வியாதியால் பீடிக்கப்பட்டு பார்வைசெய்கிற உத்தியோகஸ்தருக்கு அல்லது வைத்திய உத்தியோகஸ்தருக்கு அல்லது பிரதான பொலீஸ் உத்தியோகஸ்தருக்கு அது விஷயத்தை அறிவிக்கத்தவறும் எவரும் அல்லது அவ்வியாதிவந்த நோயாளியை ஒளித்துவைப்பதற்கு உதவிசெய்யும் அல்லது தூண்டிவிடும் எவரும் குற்றமுடையவராகக் காணப்படுவர்.

12. சகல பேர்களும் பயணத்திலும் கதிர்காமத்திலும் பார்வை செய்கிற உத்தியோகஸ்தர் அல்லது பிரதான பொலீஸ் உத்தியோகஸ்தர் நியமிக்குமிடத்தில் விடுதிவிட வேண்டும். அப்படிச் செய்ய மறுக்கும் அல்லது செய்யாது விட்டுவிடும் எவரும் குற்றமுடையவராகக் கொள்ளப் படுவர்.

13. பார்வைசெய்கிற உத்தியோகஸ்தரின் உத்தரவை முன்னதாக பெற்றுக்கொள்ளாமல் கதிர்காமத்தில் பெரிய தெருக்களுக்குச்சேர்ந்த இடத்தை பிடிக்கக்கூடியதாக யாராவது ஒரு கொட்டிலேக் கட்டினாலும் அல்லது ஒரு கட்டடத்தை பெருப்பித்துக் கட்டினாலும் குற்றமுடையவராகக் காணப்படுவார்.

---

## அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஆல்-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கொழும்பு–காலி ரேட்டை லோறிஸ் ரேட்டுத் துவங்கி டிக்மன்ஸ் ரேட்டு வரைக்கும் அகலித்தற்கும், பம்பலப்பிட்டி சந்தைக்கு முன்பாக ஓர் பகிரங்க கற்கூசு கட்டுவதற்கும் என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 487. கிராமம்—பம்பலப்பிட்டி.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 10 | பம்பலப்பிட்டி ரேட்டில் இறைவரி இலக்கம் 31 ம், 33 ம் கொண்ட ஆனதங்களின் பகுதி | தோட்டத்தின் பகுதி, (செய்கை இல்லை) கட்டடப்படிகளும், கட்டடத்தின் முற்கூரையும், வழியின் பகுதியும், ஓட்டால் வேய்ந்த கட்டடமுமுள்ளது | சி. நாகலிங்கம், லிங்கவாச, 5 ம் ஒழுங்கை, கொள்ளுப்பிட்டி | 0 0 4·25 |

பிரதமபடத்து இல. A 578. கிராமம்—பம்பலப்பிட்டி.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | (பம்பலப்பிட்டி ரேட்டில்) இறைவரி இலக்கம் 31 கொண்ட ஆதனத்தின் பகுதி | தோட்டம், 2 ஓட்டால் வேய்ந்த கட்டடங்களும், இரும்புக் கம்பிவேலியின் பகுயியுமுள்ளது | சி. நாகலிங்கம், 5 ம் ஒழுங்கை, கொள்ளுப்பிட்டி | 0 0 5·67 |
| 2 | ஷை .. | வழியின் பகுதி .. .. | ஷை .. | 0 0 0·47 |
| 3 | ஷை .. | கபுக்கல் சுவர் .. .. | மேற்படியும், டபிள்யு. சாள்ஸ் சொயிசாவின் கைம்பெண்ணும், 33–1, பம்பலப்பிட்டி (வாக்குவாதத்திலிருக்கிறது) | 0 0 0·04 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆல்-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எண்ணப்படி சனுதிகார மந்திராலோசனைச் சபை எனக்குக் கற்பனை செய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள் அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1936 ம் ஆல் ஆனி மாசம் 30 ந் தேதியன்று 11 மணிக்கு இந்தக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1936 ம் ஆல் வைகாசிமீ 15 ந் உ.

ஆர். எம். எம். வூர்ஸ்லி,
அரசாட்சி ஏசண்டு.

———

1876 ம் ஆல்-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் வெலிபன்னயில் இருந்து போபிற்றிக்கு ஒரு வி. லி. ரோட்டுக்காக என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

69 ம் இலக்கக் கடைசிக் கிராமபடத்தின் 3 ம் இலக்க இணைப்படம். குறிச்சி.—வெலிப்பன்ன.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 243 | — | ஓலை கட்டியதும் மண்சுவரும் உள்ள கடை .. | வெலிப்பன்னயிலிருக்கும், யூ. எல். முஹம்மது லெவ்வை | 0 0 0·50 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆல்-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதினால் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1936 ம் ஆல் ஜூன் மாசம் 26 ந் தேதியன்று காலை 10 மணிக்கு மத்துகம, ரெஸ்ட்ஹவுஸில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

களுத்துறைக் கச்சேரி,
1936 ம் ஆல் மேய்மீ 19 ந் உ.

என். ஈ. ஏன்ஸ்ற்,
உதவி அரசாட்சி ஏசண்டு, களுத்துறை.

———

1876 ம் ஆல்–த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் நொ. 241 ம் படத்தில் $19B^2$ துண்டுக்கு பாதை திறக்க என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 241. குறிச்சி—முல்கிறிகல.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| $19B^2A$ | சேறுகஹஹேன .. | அடிபப்பாதையுள்ள சேன | இஹலபெலிகல்ல, கே. எச். தொன் கிறிகோறிஸ், இஹலபெலிகல்ல, தொன் கொர்னேலிஸ் அப்புஹாமி, ரத்னுயக கன்காணம்கே அல்விஸ் அப்பு, ரத்னுயக கன்காணம்கே ஸமதஹாமி, ரத்னுயக கன்காணம்கே பீற்றர், ரத்னுயக கன்காணம்கே ஹின்னிஹாமி, குலதுங்கமுதலிகே தொன் தாவித், குலத்துங்கமுதலிகே தொன் தாவித் மார்ட்டின் | 0 1 9·6 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதினால் அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1936 ம் ஹூ ஜூன் மாசம் 29 ந தேதியிலன்று காலை 9 மணிக்கு தங்காலை தாணயத்தில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடநதைகளினது தன்மையையும் அவ்வுடநதைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

அம்பாந்தோட்டைக் கச்சேரி,
1936 ம் ஹூ மேமீ 18 ந வ.

பீ. ஜே. ஹட்சன்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

## காணி மீட்டெடுக்கும் அறிவித்தல்கள்.

வட மாகாணம், யாழ்ப்பாணப் பகுதி வடமராட்சி நாகர் கோவிலிலிருப்பதும், அரசாட்சியாரால் அறுதியாக விற்கப்பட்டதும் இத்துடனணைக்கப்பட்டிருக்கும் டாப்பில் விபரிக்கப்பட்டிருப்பதுமாகிய காணி அதன் சொந்தக்காரனால் எட்டு வருஷத்துதிற்கு மேற்பட்ட காலமாகத் தேடாது விடப்பட்டிருப்பதாக வட மாகாண அரசாட்சி யேசன்றருக்குத் தோன்றுகிறபடியாலும் ;

மேற்படி யரசாட்சி யேசன்றர் ஊக்கமாயும் தகுதியாயும் விசாரணை நடத்தியும் மேற்படி காணியின் சொந்தக்காரனை அல்லது சொந்தக்காரனிலிருந்து பிரமாணங்களின் பிரகாரம் உரித்துப்பேசுபவரைத் தேடி யறிந்துகொள்ள வியலாதிருப்பதாலும் ;

வட மாகாண அரசாட்சி யேசன்றர் 1887ம் ஆண்டின் 4ங் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் தமக்கிருக்கு மதிகாரத்தைக்கொண்டு அதியுத்தம தேசாதிபதியுடைய சம்மதத்துடன் இத்தாற் சகலருக்கு மறிவிப்பதென்னவானல் :

சொல்லப்பட்ட காணிக்கு உரித்துச்சாதிக்கக்கூடியவர்கள் அவ்வுரித்தை 1936 ம் ஆண்டு ஆனி மாதம் முதலாந் திகதியிலிருந்து ஒரு வருஷ காலத்துள் வட மாகாண அரசாட்சி யேசன்றருக்குத் தெரிவியாதுபோனால் சொல்லப்பட்ட கட்டளைச்சட்டத்தின் 2 ம் பிரிவின் பிரகாரம் அரசாட்சியார் அக்காணியை மீட்டெடுத்துக்கொள்ளுவார் என்பதே.

யாழ்ப்பாணக் கச்சேரி,
1936 ம் ஆண்டு வைகாசிமீ 1 ந வ.

ஈ. ரீ. டைசன்,
அரசாட்சி யேசன்றர், வட மாகாணம்.

காணி டாப்பு.

யாழ்ப்பாணப் பகுதி வடமராட்சிப் பிரிவிலுள்ள கற்கோவளக் கிராமத்திலிருப்பதும் 2,227 ம் பிரிதமபடத்தில் 8,175 ந துண்டாக (உறுதிப்படம் 187,570) விபரிக்கப்பட்டிருப்பதுமாகிய ஐயன் கோவில்வெளி யென்றழைக்கப்படுங் காணி.

எல்லைகள் :—வடக்கு : அரசாட்சியாரால் உரித்துச் சொல்லப்படும் ஐயன் கோவில் வெளி

கிழக்கு . அரசாட்சியாரால் உரித்துச் சொல்லப்படும் ஐயன்கோவில் வெளி.

தெற்கு : க. டே. சின்னத்தம்பியும் மறுபேரும் உரித்துப்பேசும் ஐயன்கோவில் வெளி (உறுதிப்படம் 187,392).

மேற்கு : அரசாட்சியாரால் உரித்துச்சொல்லப்படும் ஐயன்கோவில்வெளி யெனப்படுங் காணி.

விசாலம் : 3 றூட்டும் 36 பேட்சசும்

---

வட மாகாணம், யாழ்ப்பாணப் பகுதி வடமராட்சி நாகர் கோவிலிலிருப்பதும் அரசாட்சியாரால் அறுதியாக விற்கப்பட்டதும் இத்துடனணைக்கடிபட்டிருக்கும டாப்பில் விபரிக்கப்பட்டிருப்பதுமாகிய காணி அதன் சொந்தக்காரனால் எட்டு வருஷத்திற்கு மேற்பட்ட காலமாகத் தேடாது விடப்பட்டிருப்பதாக வடமாகாண அரசாட்சி யேசன்றருக்குத் தோன்றுகிறபடியாலும் ;

மேற்படி அரசாட்சி யேசன்றர் ஊக்கமாயும் தகுதியாயும் விசாரணை நடத்தியும் மேற்படி காணியின் சொந்தக்காரனை யல்லது சொந்தக்காரனிலிருந்து பிரமாணங்களின் பிரகாரம் உரித்துப்பேசுபவரைத் தேடி யறிந்துகொள்ள வியலாதிருப்பதாலும் ;

வட மாகாண அரசாட்சி யேசன்றர் 1887 ம் ஆண்டின் 4 ங் கட்டளைச் சட்டத்தின் பிரகாரந் தமக்கிருக்கு மதிகாரத்தைக்கொண்டு அதியுத்தம தேசாதிபதியுடைய சம்மதத்துடன் இத்தாற் சகலருக்கு மறிவிப்பதென்னவானல் :

சொல்லப்பட்ட காணிக்கு உரித்துச் சாதிக்கக் கூடியவர்கள் அவ்வுரித்தை 1936 ம் ஆண்டு ஆனி மாதம் முதலாந் திகதியிலிருந்து ஒரு வருஷ காலத்துள் வடமாகாண அரசாட்சி யேசன்றருக்குத் தெரிவியாதுபோனால் சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 2 ம் பிரிவின் பிரகாரம் அரசாட்சியார் அக்காணியை மீட்டெடுத்துக்கொள்ளுவார் என்பதே.

யாழ்ப்பாணக் கச்சேரி,
1936 ம் ஆண்டு வைகாசிமீ 1 ந வ.

ஈ. ரீ. டைசன்,
அரசாட்சி யேசன்றர், வடமாகாணம்.

காணி டாப்பு.

யாழ்ப்பாணப் பகுதி வடமராட்சிப் பிரிவிலுள்ள கற்கோவளக் கிராமத்திலிருப்பதும் 2,227 ம் பிரதமபடத்தில் 8,171 ந துண்டாக (உறுதிப்படம் 187,568) விபரிக்கப்பட்டிருப்பதுமாகிய ஐயன்கோவில்வெளி யென்றழைக்கப்படுங் காணியின் பகுதி.

எல்லைகள் :—வக்கு : பிரதமபடம் த 487 இல் 4 ங கண்டமாகக் கண்டிருக்கும் மண் தெரு ;

கிழக்கு : கே. முத்துக்குமாரு அவர்கள் உரித்துப்பேசுங் காணி ;

தெற்கு : அரசாட்சியார் உரித்துப்பேசும் ஐயன்கோவில் வெளிக்காணி ;

மேற்கு : காலஞ்சென்ற நாகப்பர் வல்லிபுரத்தின் சொந்தக்காரரால் உரித்துப்பேசப்படும் காணி.

விசாலம் : ஏறக்குறைய ஒரு ஏக்கர்.

---

## உத்தியோக சம்பந்தமில்லாதவரின் அறிவித்தல்கள்.

1907 ம் ஆண்டின் 1 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின் 8 ம் பிரிவிற் சுட்டிய 1 ம் செடுலின் B பிரிவின்படி அறிவித்தல்.

மட்டக்களப்பு தாமரைக்கேணி பொன்னையா கந்தையா ஆகிய நான் என்னை மட்டக்களப்பு டிஸ்திறிக்கில், தமிழ்ப்பாஷையில், கடமைசெனுத்தும் பிரசித்த நொத்தாரிஸ் ஆக நியமிக்கும்படி வருகிற ஜூலை மாதம் 11 ந திகதிக்குப்பின் பதிவுகாரிய தலைவருக்கு விண்ணப்பிக்க எண்ணியிருக்கிறேன் என்பதை இதனாலறியத்தருகின்றேன்.

தாமரைக்கேணி, மட்டக்களப்பு,
1936 ம் ஹூ சித்திரைமீ 8 ந வ.

பொ. கந்தையா,

களுத்துறைப் பகுதியிலுள்ள றைகம்கோறளை அதிகாறி பற்றுவையைச் சேர்ந்த கம்புறுகொடையில வசிக்கும் கமகே டொன் குமதேரிஸ் விஜயதிலக ஆகிய நான் களுத்துறைப் பகுதியில் சிங்களப் பாஷையில் பிரசித்த நொத்தாரிஸ் கடமை பார்க்கும் ஒருவராக நியமிக்கும்படி அரசினர் பதிவுக் கந்தோர் தலைவரிடம் நிகழும் ஜூலைமீ 1 ந திகதிக்குப் பின் விண்ணப்பிப்பேனென்பதை 1907 ம் ஆண்டு 1 ம் கட்டளை சட்டத்தின் 1 B செடியுலில் 2 ம் பிரமாணத்தின்படி இதனால் அறிவிக்கின்றேன்.

கம்புறுகொடை,
1936 ம் ஹூ மார்ச்மீ 20 ந வ.

ஜீ. டி. கே. விஜயதிலக.

---

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.